Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பிரஞ்சியர் கட்டிடக் கலையும் புதுச்சேரி நகர அமைப்பும்

ம. சுபாஷினி
உதவிப் பேராசிரியர்
மைலம் பொறியியல் கல்லூரி, மைலம்
திண்டிவனம் தாலுக்கா 604 304

96

**முன்னுரை :**

பிரான்ஸிலிருந்துவடமேற்கில்உள்ளமாலே (Maleu) என்றதுறைமுகப்பகுதியிலிருந்து 1617ஆம் ஆண்டில்ழான்பெப்பின்என்னும்பிரஞ்சுக்காரர்தலைமையில்வணிகநோக்கில்இந்தியாவிற்குப்புறப்பட்டுவந்தவணிகர்கள்செஞ்சிநாயக்கரின்அனுமதியோடுஅவரின்ஆளுகைக்குஉட்பட்டபுதுச்சேரியில்வந்திறங்கினர்.

ஆனால்சிறிதுகாலத்தில்ஐரோப்பாவில்போர்ச்சூழல்உருவானதால்அவர்கள்விரைவில்ஊர்திரும்பவேண்டியதாயிற்று.இதற்குமுன்னர்1553முதல்1614வரைபோர்ச்சுகீசியர்கள்புதுச்சேரியில்தங்கியிருந்துவணிகம்செய்துவந்தனர்.தங்களின்வணிகப்பொருட்களுக்காகஒருகல்கட்டிடத்தையும்அவர்கள்எழுப்பியிருந்தனர்.இதுவேபுதுச்சேரியில்கட்டப்பட்டமுதல்கல்கட்டிடமாகப்பதிவாகிறது.போர்ச்சுக்கீசியர்கள்விட்டுச்சென்றகட்டிடத்தை 1618-ஆம் ஆண்டில்டச்சுக்காரர்கள் (நெதர்லாந்துநாட்டைச்சார்ந்தவர்கள்) பயன்படுத்தினர். 1624-ஆம்ஆண்டிலிருந்து 1656 வரைசுமார் 33 ஆண்டுகள்ஐரோப்பவில்நெதர்லாந்திற்குஅருகிலிருந்தநாடானடென்மார்க்கிலிருந்துவந்தடேனிஷ்காரர்கள்புதுச்சேரியில்வாணிபம்செய்துவந்தனர்.கடற்கறையில்செங்கல்மதிற்சுவர்களைக்கட்டினர். தங்களின்வியாபாரப்பொருட்களைப்பாதுகாக்ககூரைவேய்ந்ததிறந்தவெளிக்கூடங்கள்அமைத்தனர். டேனிஷ்காரர்கள்கோபுரத்துடன்அமைத்தகல்வீடே(MaisondeDanois)புதுச்சேரியில்கட்டப்பெற்றமுதல் ஐரோப்பியர்களுக்கானகுடியிருப்பாகும்.அதற்குசிலஆண்டுகளுக்குப்பின்னர்பிரஞ்சுக்காரர்கள்புதுச்சேரிக்குவந்தனர்.1675ஆம்ஆண்டில்பிரான்சுவாமர்த்தேன்(FrancoisMartine)என்பவர்வர்த்தகப்பொறுப்பினைஏற்றுபுதுச்சேரியின்வளர்ச்சியில்கவனம்செலுத்தத்தொடங்கினார்.1677ஆம்ஆண்டில்பிரான்சுவாமர்த்தேன்வர்த்தகக்கட்டிடங்கள்சிலவற்றைக்கட்டியதோடுபுதுச்சேரியில்கடற்கரையையொட்டிபிரஞ்சியர்கள்குடியேறிவீடுகள்அமைத்துக்கொள்ளநேர்க்கோட்டில்ஒருதெருவைஉருவாக்கினார். அதுபிரஞ்சுக்காரர்கள்தெரு(RuedeFrancais)என்றுஅழைக்கப்பெற்றது.(தற்போதுதுய்மாவீதிஎன்றழைக்கப்படுகிறது). இதுவேபுதுச்சேரிநகரஉருவாக்கத்தின்முதல்படியாகக்கருதலாம்.

ஃபிரான்சுவாமர்த்தேன்புதுச்சேரிக்குவந்தபோதுமீன்பிடிகிராமமாகஇருந்தஇந்தபகுதியின்கடற்கரையையொட்டியகிழக்குப்பக்கத்தில்மேடானமணல்திட்டுஇருந்ததுஎன்றும்அங்குசிலமீனவர்களின்குடியிருப்புகள்இருந்தனஎன்று

ம்சொல்லப்படுகிறது.

இந்தமேட்டுப்பாங்கானப்பகுதிக்குமேற்கில்பள்ளமானஅதேசமயத்தில்சமமானநிலப்பரப்புஇருந்துள்ளது.அங்குநெல்வயல்களும்அதையடுத்துஉள்ளூர்மக்களின்குடியுருப்புகளும்இருந்துள்ளனஎன்றுழான்தெலோஷ் (Jean Deloche, 2005) குறிப்பிடுகிறார்.

வர்த்தகவிரிவாக்கத்திற்காகநெசவுத்தொழிலாளர்களையும்,சாயம்தொய்ப்பவர்களையும், இன்னபிறதொழிலாளர்களையும்பிரான்சுவாமர்த்தேன்புதுச்சேரியில்வந்துகுடியேறஅழைப்புவிடுத்தார். புதுச்சேரியின்பாதுகாப்புக்காகசெவ்வகவடிவிலானசெங்கல்கோட்டையொன்றையும் (fort Furlong) 1689-ஆம்ஆண்டில்கட்டிஅதைச்சுற்றிலும்பனைமரத்திலானதடுப்புசுவர்ஒன்றையும்உருவாக்கினார். காலப்போக்கில்வியாபாரம்விரிவடையபிரஞ்சியர்களின்வருகைஅதிகரிக்கவும்அத்துடன்உள்ளூர்தொழிலாளர்களின்வருகையும்குடியேற்றமும்நகரவிரிவாக்கத்திற்குவழிவகுத்தன.

**திறவுச்சொற்கள் :**

கோதிக்கட்டிடஅமைப்பு – அரசுகட்டிடங்கள் – கிருஸ்துவக்கோவில்கள்- இந்துக்கோவில்கள் – அரசுப்பொதுவிடங்கள்– தமிழர்களின்வீடுகள் – தொழிற்சாலைகள் – முட்டைவடிவஅமைப்பு– கடற்கரைப்பாதுகாப்பு – நீர்வளப்பெருக்கம் – பூங்கா – பெண்கள்மருத்துவனை – ஆண்கள்மருத்துவமனை – செஸ்பலகை – மேரி – கவர்னர்மாளிகை – ஆயிமண்டபம் – வாராவதி – வெள்ளைநகரம்.

**ஆய்வுநோக்கம் :**

பிரெஞ்சியர்கள்17ஆம்நூற்றாண்டில்தங்கள்காலணிநாடாகியபுதுச்சேரியில்ஏறக்குறைய2000ஆண்டுகளுக்கும்மேல்ஆட்சிபுரிந்தனர்.அப்போதுதாங்கள்கட்டியபலஅரசுகட்டிடங்களையும்,தங்கள்இல்லங்களையும்அதேகாலத்தில்பிரஞ்சுதேசத்தில்பிரபலமாகஇருந்த'கோதிக்'என்றகட்டிடக்கலையின்அடிப்படையில்தங்களின்இல்லங்களையும்,அரசுஅலுவலகங்களையும்புதுவையில்அமைத்துக்கொண்டார்கள். அவற்றின்வரலாற்றைஆய்வதேஇக்கட்டுரையின்நோக்கமாகும்.

**புதுச்சேரிநகரஅமைப்பு:**

1693ஆம்ஆண்டில்புதுச்சேரியைகைப்பற்றியிருந்தடச்சுக்காரர்கள்இங்குபுதியநகரத்தைவடிவமைக்களண்ணினர்.ஐரோப்பியர்வாழ்ந்தபகுதியையும்உள்ளூர்வாசிகளின்குடியிருப்புகளையும்இணைத்துகோழிமுட்டைவடிவில் (oval shape) புதுச்சேரிஎன்றதொருஅழகியநகரத்தைஉருவாக்கமுயன்றனர். 1694-ஆம் ஆண்டில்வெர்போர்க்மோஸ்(Verborgmoes)என்பவர்செஸ்பலகையைப்போன்றுபஸ்தீத்முறையில்நகரஅமைப்பைவரைபடத்தில்அமைத்தார்.(இராசசெல்வம்,2020).இதுபுதுச்சேரிநகரஅமைப்பின்முதல்வரைபடமாகக்கருதப்படுகிறது.இதைவரைந்துமுடித்துடச்சுக்காரர்கள்நகரஉருவாக்கத்தின்ஆயத்தப்பணிகளைத்தொடங்கியபோது1697ஆம்ஆண்டில்ஐரோப்பாவில்பிரஞ்சுக்காரர்களுக்கும்டச்சுக்காரர்களுக்கும் ஏற்பட்டரிஸ்விக்ஒப்ப

ந்தத்தின்படிபுதுச்சேரியைபிரஞ்சுக்காரர்களிடம்ஒப்படைத்துவிட்டுப்போகவேண்டியதாயிற்று. மீண்டும்புதுச்சேரியைப்பெற்றுக்கொண்டபிரஞ்சுக்காரர்கள்பிரான்சுவாமர்த்தேன்தலைமையில்வர்த்தகத்தைத்தொடங்கினர்.

புதிதாகஐந்துமுகப்புகளுடன்நட்சத்திரவடிவில்லூயிக்கோட்டையையும்பாதுகாப்பிற்குகொத்தளங்களுடன்கூடியசுற்றுமதில்சுவர்ஒன்றையும்ஆறுஆண்டுகளில்கட்டிமுடித்தனர்.

பெரியகால்வாய்எனப்படும்உப்பாற்றின்தெற்கில்மக்களைக்குடியமர்த்திநகரைவிரிவுபடுத்தினார். டச்சுக்காரர்கள்வரைந்தவரைபடத்தின்அடிப்படையில்தான்பிரான்சுவாமர்த்தேன்புதுச்சேரிநகரைவிரிவடையச்செய்தார்என்றுஜெயசீலஸ்டீஃபன் (2018) கூறியகருத்தைழான்திலோஷ் (2004, 2005)

ஆவணங்களின்ஆதாரங்களோடும்வரைபடங்களோடும்நிறுவினார்.கோவில்களையும்,கடைவீதிகளையும்மையமாகவைத்துபோதுமானதிறந்தவெளிஅமைப்புகளோடு,நிலங்களைஅளப்பதற்குவசதியாகசதுரவடிவில்குறுக்கும்நெடுக்குமாகவீதிகளைஅமைத்துபஸ்தீத்முறையில்பிரஞ்சுபொறியியல்வல்லுநர்பொர்சே(Bourcet) துணையுடன்பிரான்சுவாமர்த்தேன் 1765-ஆம் ஆண்டில்புதுச்சேரியைபுனரமைக்கத்தொடங்கினார்.

தொடக்கத்தில்புதுச்சேரிநகரம்லூயிக்கோட்டையைமையமாகவைத்துநான்குபகுதிகளாகஅமைந்தது கோட்டையின்வடக்குப்பக்கத்தில்(செய்ன்லூயிப்பகுதி)பெரும்பாலும்அரசாங்கஅலுவலகப்பகுதியாகவும்,தெற்குப்பகுதி (செய்ன்லொரன்பகுதி) வெள்ளைக்காரர்களின்குடியிருப்புப்பகுதியாகவும்அமைந்தன. லூயிக்கோட்டையின்மேற்குப்பகுதியில்பெரியவாய்க்காலைத்தாண்டியிருந்தபகுதியின்வடக்குப்பக்கத்தில்இருந்தமாதாக்கோவிலைச்சுற்றிமிஷனரிகுடியிருப்புகளும்,உள்ளூர்வர்த்தகர்களும்,தொழிலாளர்களும்குடியிருந்தனர்.தெற்குப்பகுதியில்(செய்ன்லொரன்பகுதிக்குநேர்மேற்கே)அதாவதுஆஸ்பத்திரிபகுதியில் (ஒப்பித்தால்பகுதி) மக்கள்குடியிருப்பும், தொழிற்சாலைகளும், கடைகளும் இருந்தன.

டச்சுக்காரர்கள்தமிழ்சமூகத்தில்புரையோடிப்போனசாதியமைப்புகளைநன்குஅறிந்திருந்ததால்; உள்ளூர்வாசிகளுக்குள்சிக்கல்கள்வராமல்இருக்கசாதியமைப்பின்அடிப்படையிலும்அதையொட்டிய தொழில்அடிப்படையிலும்குடியிருப்புகளைப்பிரித்திருந்தனர்.

நகரின்மையப்பகுதியிலிருந்துசாதிவாரியாகத்தெருப்பெயர்கள்அமைந்தன.நகரின்தெற்குவடக்குமூலைகளில்உழைக்கும்வர்க்கத்தினர்குடியமர்த்தப்பட்டனர்.நகரின்மையப்பகுதியிலிருந்துபெரியபார்ப்பாரவீதி, கோமுட்டிவீதி, செட்டிவீதி, என்றுசாதியபாகுபாட்டுடன்அமைக்கப்பட்டதெருப்பெயர்கள்நகரின் 'ஒவல்வடிவ'இறுதியில்வண்ணாரவீதி, ஒத்தவாடைத்தெருஎன்றுநிறைவுபெற்றது.

இந்த'ஓவல்வடிவநகரமைப்பின்மத்தியப்பகுதியில்தெற்குவடக்காகபோகும்நேரானவீதிபட்டினவீதியாகும்(துய்ப்ளேக்ஸ்வீதி)தற்போதுகாந்திவீதி).இதற்குகிழக்குப்பக்கத்தில்உள்ளகால்வாய்அமைப்புநகரின் அரைப்பகுதியைஇரண்டுதுண்டுகளாகப்பிரிக்கிறது.

கடற்கரையைஒட்டியவாய்க்காலின்கிழக்குப்பகுதியில்வந்தேறிகளானவெள்ளையர்அதிகம்வாழ்ந்ததால் அதுவெள்ளைநகரம்(villleblanche)என்றும்வாய்க்காலுக்குமேற்கேஉள்ளூர்வாசிகளின்குடியிருப்புகளால்நிரம்பியிருந்தபகுதி

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

யும்பட்டினவீதிக்குமேற்கேஉள்ளபகுதியும் ‘கருப்பர்’நகரம் (ville noire) என்றும் 06ஜூலை1827அன்றுபிரிக்கப்பட்டது.ஒருபகுதியைவெள்ளைநகரம்என்றுசொன்னதற்குமாற்றாகதமிழர்கள்எல்லோரும்வாழ்ந்தபகுதியைநிறத்தின்அடிப்படையில்கருப்பர்நகரம்என்றுஅன்றையஅரசாங்கம் சொன்னது.இன்றும்வழக்கிலுள்ளது.உள்ளூர்மக்களின்சமய, சமூகநிகழ்ச்சிகள், விழாக்கள், ஊர்வலங்கள்போன்றனயாவும்வெள்ளைநகரப்பகுதிகளில்தடைச்செய்யப்பட்டன.உள்ளூர்மக்களின்நடமாட்டங்கள்கூடஅங்குஓரளவுகட்டுப்படுத்தப்பட்டிருந்தது.வெள்ளைக்காரர்களுக்கும்கிரியோல்மக்களுக்கும்கப்பியூஸ்கோவிலும்,சாதிதமிழ்க்கிருத்தவர்களுக்குமிஷின்வீதியில்உள்ளஜென்மராக்கினிமாதாகோவிலும்,இன்னபிறகிருத்துவர்களுக்குரயில்வேநிலையத்திற்குஎதிரில்உள்ளஇருதயஆண்டவர்கோவிலும்பயன்பாட்டில்இருந்தன.

கப்பியூஸ்கோவிலில்வழிபாடுதமிழில்நடைபெறாதுஎன்பதால்வெள்ளைக்காரர்கோவிலுக்கு

இந்தியர்கள்போவதுநடைமுறையில்சாத்தியப்படவில்லை.கிருத்தவர்களின்புதைவிடங்களானகல்லறைகளும்வெள்ளையர், தமிழர், தாழ்த்தப்பட்டோர்என்றபிரிவினையில்அமைக்கப்பட்டிருந்தன. இன்றைக்கும்கூடதிரையரங்குகள்,திருமணமண்டபங்கள்,கள்ளுக்கடைகள்,சாராயக்கடைகள்ஆகியன வெள்ளைநகரப்பகுதியில்இல்லைஎன்பதோடுஅங்கேஅரசியல்மற்றும்சினிமாபோஸ்டர்கள், பேனர்கள்ஆகியனமிகஅரிதாகவேகாணப்படும். வெள்ளைநகரப்பகுதியில்பசார்செய்ன்லொரான் (Rue BazarDeSaintLaurent)என்றொருவீதிஇருப்பதால்வெள்ளையர்களுக்குஒருகடைத்தெருஇருந்துள்ளதை அறியலாம்.

தமிழர்களுக்கானபெரியகடைதுய்ப்ளேக்ஸ்வீதியிலும்நகரின்தெற்குப்பகுதியில்வாழ்ந்தஇஸ்லாமியர்களின்வசதிக்காகஅங்கேசின்னகடையொன்றும்அமைந்தது.நகரின்வடமேற்குப்பகுதியில்புல்வார்வீதிக்கு அருகில் ’பாலாகடை’என்றபெயரில்ஒருகடைப்பகுதிஉழைப்பாளர்களின்பயன்பாட்டிற்காகஇருந்தது. அடிக்கடிஇங்கேசண்டைச்சச்சரவுகள்நிகழும்என்பதால்இதனை ‘நெருப்புத்தீவு’என்றுகுறிப்பிட்டனர் (இராமதாசு, 2021).

**தெருப்பெயர்கள்:**

பெரும்பாலானதெருக்கள்கடற்கரைப்பகுதியிலிருந்துமேற்குஎல்லைவரைநீண்டிருந்தாலும்கடற்கரைப்பகுதியிலிருந்துவாய்க்கால்வரைபிரஞ்சுகாரர்களின்பெயரும்வாய்க்காலுக்குமேற்கால்புல்வார்கடைசிவரைவேறுதமிழ்பெயரும்இருக்கும்.வீட்டுஎண்களும்வேறுபட்டிருக்கும்.சான்றாக,வாய்க்காலுக்குமேற்கேஉள்ளஈஸ்வரன்தர்மராஜாகோவில்தெருவாய்க்காலுக்குகிழக்கேலல்லிதொலாந்தல்வீதியாககடற்கரைவரைநீண்டுள்ளது.1842ஆம்ஆண்டில்நகரத்தின்தெருக்கள்எல்லாம்அரசாங்கஆணையின்படிநேர்படுத்தப்பட்டதாகத்தெரிகிறது.13மே1856ஆம்ஆண்டில்தெருப்பெயர்களைத்தமிழிலும்பிரஞ்சிலும்பொறிக்கவும், வீடுகளுக்குஎண்கள்வழங்கவும்உத்தரவுபோடப்பட்டது (மன்னர்மன்னன், 1958).

பிரஞ்சுமொழியில் ‘rue’ என்பதுதெருஎன்றுபொருள்; ‘ruelle’ என்பதுசந்துஎன்றுபொருள்படும். பெரியசுற்றுப்பாதையை ‘boulevard’ என்றனர். பாரீஸ்நகரத்தின்மத்தியில்ரைன் (Rhine) நதியின்இருபெரும்க



அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
(பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மையம்,
கட்டிடக்கலைத்துறை & கட்டுமானத்துறை)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
(கட்டடக்கலைத்துறை) மற்றும்
பிரணவ் நுண்கலை ஆய்விதழ்
இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம்
' தமிழரின் கட்டடக்கலை தொழில்நுட்பம் "
Special Issue - Volume -2 Issue -2

ரைகளையொட்டிஉள்ளதெருக்கள்நிழல்தரும்பூமரங்களுடன்அமைந்திருக்கும் பிரஞ்சியர்கள்மாலைவேளைகளில்இதன்வழியாகநடந்துசென்றுஓய்வெடுத்துமகிழ்வர். அதுபோன்றேபெரியவாய்க்காலையொட்டிஇருபுறங்களிலும்மரங்களைநட்டுஅழகுபடுத்திஆங்கிலேய ரோடுபோரிட்டுவென்றதின்நினைவாகஆம்பூர்சாலை,செஞ்சிசாலைஎன்றுஇருகரைகளுக்கும்பெயரிட் டிருந்தனர்.

quai'என்பதுபிரஞ்சுமொழியில்பூமரச்சாலையைக்குறிக்கும்.புதுச்சேரியில்இந்தஇருதெருக்கள்மட்டுமே அவ்வாறுபெயரிடப்பட்டன.முட்டைவடிவபுதுச்சேரிநகரின்எல்லையில்அமைந்தசுற்றுவீதிகளை 'புல்வார்' (Boulevard) என்றனர். அவைவடவண்டபுல்வார், மேற்குபுல்வார், தென்னண்டபுல்வார், 'பீச்' வீதிஎன்றுசொல்லப்படுகின்றன. பெரும்பாலும்சந்துஎன்றமிகவும்குறுகலானதெருவில்வண்ணார், வண்டிக்காரர்கள்,நாவிதர்போன்றோர்குடியிருந்தனர்.தமிழர்பகுதியில்உள்ளதெருக்களைவிடவெள்ளை நகரப்பகுதியில்உள்ளதெருக்கள்அகலமாகக்காணப்படும்.முஸ்லீம்மக்கள்குடியிருப்புகளில்உள்ளதெருக்

கள்குறுகலாகஅமைந்திருக்கும்.தெருவின்இருபுறங்களிலும்கழிவுநீர்செல்லவாய்க்கால்கள்அமைந்திருக் கும்.மேரியின்(Marie=நகராட்சி)தூய்மைப்பணியாளர்கள்காலைமாலைஆகியஇருவேளைகளிலும்அக் காலத்தில்கழிவுநீர்வாய்க்காலைச்சுத்தம்செய்வர். இவர்களதுபணிகளைக்கண்காணிக்கமேலாளர்கள் ('சூரியான்என்றுஅழைக்கப்படுவர்)இருந்தனர்.நீர்தேங்காமல்குப்பைகள்எதுவுமின்றிவீதிகள்சுத்தமாக அப்போதுஇருந்தன.

**பிரஞ்சியர்வீடுகள்**:

பிரஞ்சியர்களின்வீடுகளின்நுழைவாயில்களில்உயரமானபெரியகதவுகள்இருக்கும்.நுழைவுவாயிலைஅ டுத்துஅலங்காரச்செடிகள்உள்ளசிறுதோட்டம்காணப்படும்.அதற்குஅடுத்துஉயர்ந்தவட்டவடிவமானதூ ண்களைக்கொண்டுவீடுஅமைந்திருக்கும்.வீட்டின்கூரைஏறக்குறைய20அடிஉயரத்தில்அமைந்துபெரிய சன்னல்களுடன்காற்றோட்டமாகக்காணப்படும்.வீட்டின்சன்னல்களின்சிலகதவுகள்மேல்கீழ்வரிசையி ல்அசைக்கும்வகையில்ஒருசட்டத்தில்அமைந்ததுண்டுத்திறப்புகளோடுஇருக்கும். சன்னல்கதவுகளின்வெளிப்புறம்பாதுகாப்புக்காகநீண்டஇரும்புக்கம்பிகள்புதைக்கப்பட்டிருக்கும். இந்தஇரும்புகம்பிகளின்அடிப்பகுதிவெளிப்பக்கமாகபுடைத்துக்காணப்படும்.இந்தபுடைப்புவரைதலை யைநீட்டிசன்னல்வழியாகதெருவின்இருபுறங்களிலும்நடப்பதைக்காணமுடியும்.

**அரசுகட்டிடங்கள்** :

கி.பி.1140முதல்1500வரைபிரான்சில்ஃபிரெஞ்சுகோதிக்(Gothic)கட்டிடக்கலைபிரபலமாகிநடைமுறை யில்இருந்தகட்டிடக்கலைஆகும்.இதைப்பின்பற்றியேகாலனிநாடுகளிலும்பிரஞ்சியர்கள்பெரியவட்டவ டிவானதூண்கள்அமைத்துஉயரமானகூரைகளைக்கொண்டஅகலமானசன்னல்களுடன்வீடுகள்அமைத் தனர்.அரசுகட்டிடங்களையும்பிரஞ்சுகோதிக்முறையில்கட்டினர்.இந்தசிறியநகரத்தில்பலபிரஞ்சுகட்டிட ங்கள்இன்றும்நினைவுச்சின்னங்களாகஉள்ளன.பிரஞ்சுஅரசின்கட்டிடங்கள்அக்காலத்தில்வெள்ளைநிற ங்களுடன்காணப்படும்.அரவிந்த்ஆசிரமத்தினரின்கட்டிடங்கள்வெளிர்சாம்பல்நிறத்தில்பெரும்பாலும்இ ருக்கும்.தற் போதுவெ

ள்ளைநகரப்பகுதிகளில்பலவெள்ளைக்காரர்களின்வீடுகள்மஞ்சள்நிறத்தில்உள்ளன. வெள்ளைநகரப்பகுதிகளில்பலவீடுகள்பிரஞ்சுவடிவமைப்பில்கட்டப்பெற்றுள்ளன.

**கவர்னர்மாளிகை:**

புதுச்சேரியின்முதல்கவர்னரானபிரான்சுவாமர்த்தேன்லூயிக்கோட்டைக்குள்1733-ஆம் ஆண்டில்ஒருவீடுகட்டிகொண்டுஅதில்வசித்தார். அவருக்குப்பின்துய்ப்ளேக்ஸூம்அங்கேவசித்தார். ஆங்கிலேயர்களின்தாக்குதலில்புதுச்சேரிதரைமட்டமாகஇடிக்கப்பட்டபோதுகவர்னர்வீடும்இடிந்துபோனது. 1768-ஆம் ஆண்டில்பிரஞ்சுபொறியியல்அறிஞர்பொர்சேவடிவமைத்தகுவர்னர் (கவர்னர்) மாளிகையும்முதல்தளம்கட்டிமுடித்தபின்னர்நடந்தஆங்கிலேயருடனானபோரில்இடிக்கப்பட்டது. பின்னர்ஸ்பினாஸ்என்றபொறியியலாளர்உருவாக்கியவரைவுபடத்திற்குப்பிறகுழர்போன்என்றபொறியியலாளர்தந்ததிட்டவரைவின்அடிப்படையில்மீண்டும்கவர்னர்மாளிகை1820ஆம்ஆண்டில்கட்டப்பட்டது.24உயரம்மிக்கவட்டவடிவானதூண்களோடும்உயர்ந்தகூரையோடும்அமைந்தகீழ்த்தளமும்

மேல்தளமும்இருக்குமாறுமுன்னும்பின்னும்நீண்டபெரியதாழ்வாரங்கள்வைத்துகட்டப்பட்டது. 18ஆம்நூற்றாண்டில்தென்கிழக்குஆசியாவிலேயேபிரஞ்சுஇந்தியகட்டிடக்கலைநயத்தோடுஉருவானஅழகியதொருமாளிகையாகபுதுச்சேரிகவர்னர்மாளிகைத்திகழ்ந்தது.மளிகையின்கீழ்த்தளத்தில்உள்ளபெரியகூடம்பிரான்சுநாட்டுச்சிலைகளால்அலங்கரிக்கப்பட்டுஅழகாகக்காட்சியளித்தது. சுவர்களில்அழகியவேலைப்பாடுமிக்கவெள்ளித்தகடுகளில்புதைத்தமிகுப்பெரியமுகம்பார்க்கும்கண்ணாடிகள்பதிக்கப்பட்டிருந்தன.கூடத்தின்கூரையின்நடுவேபெரியசரவிளக்குதொங்கியது. இக்கூடம்விருந்தினர்களைவரவேற்கவும்உபசரிக்கவும்பயன்பட்டதாகத்தெரிகிறது. கிழக்குப்பக்கத்தில்கடலைப்பார்த்தபடிஅழகியமாடம்அமைக்கப்பட்டிருந்தது. மாளிகையின்பேரழகைஆனந்தரங்கப்பிள்ளையும்தன்நாட்குறிப்பில்பதிவுசெய்துள்ளார்.

**மேரிஎன்றநகரமன்றம்:**

புதுச்சேரிகடற்கரைச்சாலையையொட்டிநகரமாளிகை(Marie)1880ஆம்ஆண்டில்பிரஞ்சுக்கட்டிடக்கலைநுணுக்கங்களோடுஇருதளங்கள்கொண்டதாகஅமைக்கப்பட்டது.இக்கட்டிடத்தின்முகப்பில் 'நகரஇல்லம்'என்றபொருளில் 'Hotel de Ville' என்றுபிரஞ்சில்பொறிக்கப்பட்டிருக்கும். 1887-ஆம்ஆண்டுடிசம்பர்மாதம்பிரான்ஸ்அரசின்கலைப்பிரிவுஅமைச்சர் (Minister for fine arts) வழங்கிய 'நீதியும்-குற்றத்தைத்தொடரும்தெய்வப்பழியும்என்ற 'ஆயில்பெயிண்ட்'ஓவியம் 'புருத்தோன்' என்றபிரஞ்சுஓவியரின்கைவண்ணத்தில்மிகச்சிறப்பாகஅமைந்துமண்டபத்தின்மாடிப்படியின்மேல்வாயிலில்கண்ணைக்கவரும்வண்ணம்அமைந்திருத்தது.இங்குதான்நகரமேயரால்திருமணப்பதிவுகள்நிகழ்த்தபடும். கீழ்த்தளத்தில்நகரஅலுவலகமும்மேல்தளத்தில்நகரசபைக்கூட்டமும்நடைபெறும் 2014-ஆம்ஆண்டில்இக்கட்டிடம்சற்றேசிதலமடைந்ததால்நகரசபைஅலுவலகம்வேறிடத்திற்குமாற்றப்பட்டது

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

தம்பெய்தபெருமழையில்மேரிக்கட்டிடம்இடிந்துவிழுந்தது. 2016-ஆம்ஆண்டில்இதன்புனரமைப்புநடவடிக்கைகள்தொடங்கப்பெற்றுதற்போதுபழையவடிவில்உருப்பெற்றிருக்கிறது.

மேரிகட்டிடஅமைப்பைப்போன்றேசிறியஅளவில்1849ஆம்ஆண்டில்புதுச்சேரிவர்த்தகசபைபாரதிபூங்காவின்தெற்கிலும்அதற்குபக்கத்தில்1875–ஆம்ஆண்டில்இந்தோ-சீனாவங்கியும்கட்டப்பட்டன. அக்காலத்தில்பிரான்ஸ்தேசத்தோடுஇருந்தபணபரிமாற்றத்தைபெரும்பாலும்இந்தவங்கிமேற்கொண்டது.

**ஆயிமண்டபம்**:

ஆயிஎன்றதாசியின்வீட்டைகோவில்என்றுதவறுதலாகஎண்ணிக்கும்பிடநேர்ந்ததால்மிகவும்சங்கடத்திற்குள்ளானமன்னன்கிருஷ்ணதேவராயர்அந்தவீட்டைஇடிக்கஉத்தரவிட்டபோதுஆயிதானேமுன்வந்துதன்வீட்டைஇடித்துவிட்டுமக்கள்பயன்பாட்டிற்குஅங்குகுளம்ஒன்றைவெட்டியிருந்தாள். அதற்குப்பிறகுபலஆண்டுகள்ஆனபின்புபிரஞ்சியர்ஆட்சியில்குடிநீர்தட்டுப்பாடுநிலவியது. அப்போதுகவர்னரானபோன்தெம்ப்ஸ்(Bontemps)அவர்கள்லெமெரீஸ்(Lamairesse)என்ற

பொறியியலாளரிடம்கேட்டுக்கொண்டதிற்குஏற்ப1863ஆம்ஆண்டில்முத்திரைப்பாளையத்திலிருந்தஆயிவெட்டியவற்றாதகுளத்துநீரைஏறக்குறைய08கி.மீ.தூரத்தில்இருந்தபுதுச்சேரியின்நகரமையத்திற்குகால்வாய்வழியாகக்நீரைக்கொண்டுவந்துநீரூற்றும்அமைத்திருந்தார்.இந்தசூழலில்பிரான்சுதேசத்தின்அரசரானமூன்றாம்நெப்போலியன்ஆயிதாசியின்கதையைக்கேட்டுஅவளின்தன்னலமற்றசேவைமனப்பானமையில்மகிழ்வுற்றுஅந்தநீரூற்றின்மேல்நினைவுச்சின்னமொன்றைஎழுப்பலாம்என்றஆலோசனையைமுன்வைத்தார்.அப்போதுமூன்றாம்நெப்போலியன்உலகப்போரில்வெற்றிகண்டிருந்தான். இதையெல்லாம்மனதில்கொண்டுபுதுவையின்கவர்னராகஇருந்தபோன்தெம்ஸ்வெள்ளைநகரின்மையப்பகுதியில்இருந்தநீரூற்றின்மீதுமண்டபம்கட்டநினைத்தனர்.முதலாம்நெப்போலியன்ஆஸ்திரிலிட்ஸ்போரில்(1805)பெற்றவெற்றிக்காகபிரான்ஸ்தேசத்தின்தலைநகரானபாரிஸில்கட்டியுள்ளவெற்றிவளைவுமண்டபம் (Arc de Triomphe) போலபிரஞ்சுகாலனிநாடானபுதுச்சேரியில்கட்டஎண்ணினர். இதுபெரியசதுரவடிவில்உயரமாககூம்புவடிவகூரையுடன்கட்டப்பட்டது.நான்குபக்கங்களிலும்ஒவ்வொருவளைவின்மேலும்சிற்பங்கள்வடிவமைக்கப்பட்டுள்ளன.அதில்வடக்குப்பக்கம்பெரியஇறக்கைகள்கொண்டபறவையின்சிற்பமும்,மேற்குப்பக்கத்தில்பெண்ணொருத்திசாய்ந்துபடுத்திருக்கஅவளுக்குப்பக்கத்தில்இரண்டுஒருபெரியஜாடிகள்இருப்பதுபோன்றசிற்பமும்குறிப்பிடத்தக்கன. அதனைசுற்றியிருந்தபகுதிபூங்காவாகவடிவமைக்கப்பட்டுஅரசாங்ககுடியரசுதிடலாகபெயர்பெற்றுபிறகுஇரண்டாம்உலகப்போரில்பிரான்சுக்குப்பெரும்வெற்றியைத்தேடித்தந்தஜெனரல்தெகால்பெயரால் ‘சார்ல்தெகோல்பூங்கா’ (Charles De Gaulle) என்றுபெயரிடப்பெற்றது.

**இரயில்நிலையம்**:

1878-ஆம்ஆண்டில்தொடங்



அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
(பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மையம், கட்டிடக்கலைத்துறை & கட்டுமானத்துறை)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
(கட்டடக்கலைத்துறை) மற்றும்
பிரணவ் நுண்கலை ஆய்விதழ்
இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம்
' தமிழரின் கட்டடக்கலை தொழில்நுட்பம் "
Special Issue - Volume -2 Issue -2

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கி1879அக்டோபரில்கட்டிமுடிக்கப்பட்டது.இதன்முகப்புகோதிக்கட்டிடகலையின்சாயலில்உயரமானதூண்களைக்கொண்டுஅகலமானவாசலுடன்மண்டபம்போலஅமைந்துள்ளது.
இதன்வெளிப்புறத்தில்பிரான்சிலிருந்துகொண்டுவரப்பட்டவெண்மைநிறஇரும்புவார்ப்புபெண்ணின்சிலையொன்றுஒருபீடத்தின்மீதுவைக்கப்பட்டுள்ளது.
இந்தபீடத்தில்கொம்புகள்கொண்டவிசித்திரமானமனிதஉருவம்காணப்படுகிறது.10அடிஉயரமுள்ளஇந்தபெண்ணின்சிலைகிரேக்கதேவதையாகஇருக்கலாம்என்றுஆய்வாளர்கள்கருதுகின்றனர்.
ஆனால்இரயில்நிலையத்திற்குமுன்வாசல்எதிரில்இருப்பதால்பொதுமக்கள்அனைவரும்இதனை'பயணதேவதை'என்றேகருதுகின்றனர்.புதுச்சேரிக்குமுத்திரையர்பாளையத்திலிருந்துகுடிநீர்கொண்டுவந்துவிநியோகம்செய்யத்தொடங்கியதன்நினைவாக1863ஆம்ஆண்டில்மேற்குபுல்வார்சாலையில்நிறுவப்பட்டதண்ணீர்தொட்டியின்முன்னால்இந்தகிரேக்கசிலைஇருந்ததாகவும்பின்னர்1965ஆம்ஆண்டில்இதுரயில்நிலையத்திற்குமுன்னர்இடம்மாற்றம்செய்தனர்என்றுஇராமன் (2021,ஆ) குறிப்பிடுகிறார்.
1853ஆம்ஆண்டில்அரசாங்கபொதுமருத்துவமனைதற்போதையபாரதிபூங்காவிற்குமேற்கில்கட்டப்பட்டுள்ளது. இந்தோ- பிரஞ்சுகட்டிடகலையமைப்பில்உயரமானபெரியவட்டவடிவில்தூண்அமைத்து, உயரத்தில்கூரைபோட்டு,அகன்றதாழ்வாரத்துடன்காற்றுவசதிகொண்டஅறைகளோடு

மருத்துவமனைக்கட்டப்பட்டுள்ளது.1936ஆம்ஆண்டில்இதற்குவடக்குப்பக்கத்தில்பெண்கள்மருத்துவமனைஆண்களின்மருத்துவமனைபோன்றுதனியாகஅமைந்தது.

**கலங்கரைவிளக்கம்:**

1836ஜூலைமாதத்தில்கடற்கரைச்சாலையில்முழுதும்செங்கற்களைக்கொண்டுகுழைசுண்ணாம்புக்காரைபூசிவெள்ளைநிறத்தில்கட்டப்பட்டது.25.7மீட்டர்உயரத்தில்அமைந்தஇந்தகலங்கரைவிளக்கத்திற்குஅஸ்திவாரமாகஒன்பதுகுழாய்கிணறுவடிவில்உறுதியானஅடித்தளமும்அதற்குமேல்வட்டவடிவில்பீடம்போன்றஅமைப்பில்கட்டுமானமும்உள்ளது. இந்தகலங்கரைவிளக்கத்தின்ஒளிஏறக்குறைய 15 கி.மீ. வரைதெரியும். 1931-ஆம்ஆண்டில்இதன்விளக்குகள்கூடுதல்ஒளிகொண்டதாகமாற்றப்பட்டன. இக்கலங்கரைவிளக்கம் 1970வரைசெயல்பட்டுள்ளது.

**வாராவதி**:

புதுச்சேரியில்கடல்மார்க்கமாகசரக்குப்போக்குவரத்தினைமேற்கொள்ள1864ஆம்ஆண்டில்இரும்புகடற்பாலம் (வாராவதி) 192 மீட்டர்நீளத்தில்போடப்பட்டது. பின்னர்கொஞ்சம்கொஞ்சமாக 1880-ஆம்ஆண்டில் 64 மீட்டரும், 1909-ஆம்ஆண்டில் 76 மீட்டரும்நீட்டப்பட்டது. வாராவதியில்மேல்தரைப்பகுதிபர்மாதேக்குச்சட்டங்களால்அமைந்தது.கப்பலிலிருந்துசரக்குகளைஏற்றிவரஇரயில்பாதைகள்போடப்பட்டுவண்டிகளைத்தள்ளிக்கொண்டுபோகும்வசதிகள்செய்யப்பட்டன.
1902-ஆம்ஆண்டில்ஏற்பட்டபெரும்புயலால்வாராவதிசேதமுற்றுபயனற்றதாகப்போனது.
1970ஆம்ஆண்டுவரைமக்கள்நடந்துபோய்வந்துகொண்டிருந்தகடற்பாலம்பாதுகாப்புகருதி1980-ஆம்ஆண்டில்அகற்றப்பட்டது.

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

**கல்விநிலையங்கள்**:

புதுச்சேரியில்பிரஞ்சியரின்கட்டிடக்கலையோடுகட்டப்பெற்றஆராய்ச்சிமற்றும்கல்விநிலையங்கள்உள்ளன.பிரஞ்சுநாட்டைச்சேர்ந்தஇந்தியவியல்ஆய்வுஅறிஞரானழான்ஃபிலியோசாஅவர்களின்பெருமுயற்சியால்புதுச்சேரியின்விடுதலைகாலத்திலேயேபிரஞ்சுஆய்வுநிறுவன (Institutfrançais de Pondichéry) வரைவுத்திட்டம்ஏற்கப்பட்டு 1955 மார்ச் 22ஆம் தேதிதொடங்கபெற்றது. இங்குள்ளநூல்நிலையத்தில் 70,000ஆயிரதிற்கும்மேற்பட்டபிரஞ்சு,ஆங்கிலம்,தமிழ்நூல்கள்உள்ளதொருமிகச்சிறந்தஆய்வுநிறுவனமாகத்திகழ்ந்துவருகிறது.விடுதலைக்காலஒப்பந்தத்தின்படிஇந்தநிறுவனம்உள்ளநிலப்பகுதிபிரஞ்சுஅரசாங்கத்திற்குஉரியதாகும்.பின்னர்1964முதல்இந்தியவியல்ஆய்வில்தனிக்கவனம்செலுத்துவதற்காககீழ்த்திசைபிரஞ்சுஆய்வுநிறுவனமொன்று (Ecole française d'Extrême-Orient) தொடங்கப்பெற்றது. புதுச்சேரியில்வாழும்முன்னாள், இந்நாள்பிரஞ்சுஅதிகாரிகள், சொல்தாக்கள் (French soldiers) போன்றோரின்நலனுக்காகபிரஞ்சுப்பள்ளியொன்று (Lycée Français International à Pondichéry) கட்டப்பெற்றுபிரஞ்சுநாட்டுகல்விமுறைப்படிநடந்துவருகிறது.

அதுபோன்றேபிரஞ்சுராணுவத்தில்பணியாற்றியபுதுச்சேரிசொல்தாக்கள்வந்துதங்கிப்போகஓய்வுஇல்லம்ஒன்றும்(FoyerDeSoldat)கட்டப்பட்டுள்ளது.

இக்கல்விநிறுவனக்கட்டிடங்கள்எல்லாம்பிரஞ்சுக்கட்டிடக்கலையம்சத்துடன்கட்டப்பெற்றுள்ளன.

**கிருத்துவக்கோவில்கள்**:

பிரஞ்சியர்கள்காலத்தில்சிறப்புவாய்ந்தகிருத்துவக்கோவில்கள்பலபிரஞ்சுக்கட்டிடக்கலையம்சத்துடன்கட்டப்பெற்றன.பொதுவாககத்தோலிக்கக்கிருத்துவக்கோவில்கள்பருந்துப்பார்வையில்சிலுவைவடிவில் அமைந்திருக்கும்.கேர்என்னும்பிரஞ்சுகட்டிடக்கலைஞர்மேற்பார்வையில்1855ஆம்ஆண்டில்பிரஞ்சுக்காரர்களின்பிரத்தியோகப்பயன்பாட்டிற்காககடற்கரைச்சாலைக்குஅடுத்ததுய்மாவீதியில்கட்டபெற்றகோவில்புனிதசம்மனசுக்களின்மாதாதேவாலயமாகும். இதை 'கப்பீயுஸ்கோவில்'என்றுஅழைப்பர். தொடக்கத்தில்கப்புச்சியன்பிரிவுபாதிரிமார்கள்இக்கோவிலைநிர்வகித்துவந்ததால்இப்பெயர்பெற்றது. இக்கோவிலில்இன்றும்கூடஞாயிற்றுக்கிழமைகளில்பிரஞ்சுமொழியில்திருப்பலிநிகழ்ந்துவருகிறது. 1863-ஆம்ஆண்டில்பிரான்ஸ்அரசர்மூன்றாம்நெப்போலியன்மாதாவிண்ணேற்றகாட்சிவரைந்த 'ஆயில்பெயிண்ட்ஓவியத்தைஅன்பளிப்பாகவழங்கியுள்ளார்.இதற்குஎதிரேஉள்ளதோட்டத்தில்பிரஞ்சு விடுதலைவீராங்கனையானழான்தார்க்சிலைஉள்ளது.

அதுபோன்றேகடற்கரைச்சாலையில்பிரான்ஸ்தேசத்தில்நிறவெறிக்குஎதிராகப்போராடியசமூகச்சீர்திருத்தவாதிஷொல்சேர்அவர்களுக்குமார்பளவுசிலையும்அதற்குஅருகில்புதுச்சேரியில்புகழ்வாய்ந்தகவர்னராகவிளங்கியதுய்ப்ளேக்ஸ்சிலையும்உள்ளன.இவைமட்டுமேபுதுச்சேரியில்பிரஞ்சுக்காரர்களுக்குநிறுவப்பட்டமூன்றுசிலைகளாகும்.1771ஆம்ஆண்டில்புதுச்சேரியில்நடுவில்உள்ளமிஷின்வீதியில்ஜென்மராக்கினிமாதாக்கோவில்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

18ஆம்நூற்றாண்டுபிரஞ்சுகோதிக்கட்டிடக்கலைநுணுக்கங்களோடுபாரிஸ்ராணுவமருத்துவமனையில் உள்ள'வால்தெகிராஸ்ஆலயவடிவிலும்,கோவில்முகப்பினைபோர்ச்சுக்கீசியக்கட்டிடக்கலையமைப்பிலும்உருவாக்கினர். இது 1791ஆம்ஆண்டுதிருநிலைப்படுத்தப்பெற்றது (ஆரோக்கியநாதன், 2014). 1907டிசம்பர்மாதம்17ஆம்தேதிமுதல்திருப்பலிநிகழ்த்திரயில்வேநிலையத்தின்அருகில்வாழும்கிருத்துவர்களுக்காகதூயஇருதயஆண்டவர்பசிலிக்கா (Basilique du Sacré-Cœur de Jésus de Pondichéry) பயன்பாட்டிற்குவந்தது.இதுகோதிக்கட்டிடகலையம்சத்துடன்,வட்டமானகண்ணாடிஓவியசன்னல்களைக்கொண்டதாகவும்பிரான்சில்உள்ளகோவிலின்வடிவமைப்பில்உருவானது.இது 50 மீட்டர்நீளமும், 48 மீட்டர்அகலமும்18 மீட்டர்உயரமும்கொண்டது. 2011ஆம்ஆண்டுஇதுபுனிதஸ்தலமாக (basilica) அங்கிகரீக்கப்பட்டுள்ளது.

இதுதவிரபுதுச்சேரிநகருக்குவெளியேநெல்லித்தோப்பு, ரெட்டியார்பாளையம், வில்லியனூர், உழவர்கரைஆகியப்பகுதிகளின்பிரஞ்சியர்கள்கட்டியகோவில்கள்உண்டு.இரண்டாம்உலகப்போரின்போதுபோர்நிதிதிரட்டியகவர்னர்துய்ப்ளேக்ஸ்அதைஉரியநேரத்தில்அனுப்பஇயலாததால், அந்தநிதித்தொகையைஇரண்டாகப்பிரித்துபுதுச்சேரியின்பட்டினவீதியில்சிவன்கோவில்ஒன்றும்பெருமாள்கோவில்ஒன்றும்கட்டிக்கொள்ளஉதவியதாகத்தெரிகிறது.1956ஆம்ஆண்டில்புதுச்சேரிசுதந்திரஇந்தியாவுடன்இணைக்கப்பெற்றபோதுநம்பாரதபிரதமர்பண்டிட்ஜவஹர்லால்நேரு

'புதுச்சேரிஎன்றைக்கும்பிரான்ஸ்தேசத்தின்சன்னலாகவிளங்கும்'என்றுகூறியவாறுஇன்றும்புதுச்சேரிபிரஞ்சுசாயலோடுதனித்துவமாய்திகழ்ந்துவருகிறது.

**ஆய்வுச்சுருக்கம் :**

புதுச்சேரியில்பிரெஞ்சியர்கள்பலகட்டிடங்களையும்எழுப்பிபுதுச்சேரிசமூகத்தின்வளர்ச்சிக்குபெரும்பங்காற்றிஇருக்கிறார்கள்.பிரெஞ்சியர்கள்புதுச்சேரியில்கட்டியஅரசுக்கட்டிடங்கள்,கிறிஸ்துவக்கோயில்கள் , மருத்துவமனைகள், பொதுஇடங்கள்( பள்ளிக்கூடம் , சமூதாயகூடம்), போன்றவை17-ஆம்நூற்றாண்டில்பிரான்சில்பிரபலமானஇருந்த 'கோதிக்' என்றகட்டிடஅமைப்பாகும். 'கோதிக்' கட்டிடஅமைப்பின்படிஉயர்ந்தவட்டவடிவமானதூண்கள்,காரைபூசியஉயர்ந்ததளங்கள்போன்றஅமைப்பில்இருந்தன.பிரஞ்சியர்களின்வீடுகள்உயர்ந்ததளங்களோடும்சிறுதோட்டத்தைகொண்டிருந்தும்பெரியஜன்னல்களோடும் ,வெளிப்பக்கம்வளைந்தகம்பிகளைக்கொண்டும்பாதுகாப்புமிக்கஅமைப்போடும் ,அவர்களுடையவீடுஅமைந்திருந்தது.

பெரும்பாலும்பிரெஞ்சியர்வீடுமுன்பக்கத்தில்ஒருபெரியமதில்சுவரைகொண்டிருந்தது.அத்துடன்பிரஞ்சியர்கள்மாடிவீடுகளைவிரும்பாதுஒரேதளத்தில்உள்ளவீடுகளைவிரும்பிஅமைத்திருப்பதைபார்க்கமுடிகிறது.பிரெஞ்சியர்கட்டியசமூகபயன்பாட்டிற்கானகட்டிடங்கள்அனைத்தும்'கோதிக்'என்றமுறையில்அமைக்கப்பட்டிருந்தாலும்,இந்தியகலையமைப்பைக்கொண்டும்அவைஅமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாகசிலஇடங்களில்அவர்கள்சிற்பக்கலையைநம்முடையகட்டிடங்களிலேபுகுத்தியிருக்கிறார்கள். ஆனால்,அவர்கள்தமி

ழர்களுடையகட்டிடக்கலையின்அமைப்பிலோஅல்லதுஅதனுடையவடிவமைப்பிலோமாற்றம்செய்யவில்லை.அதேநேரத்தில்புதுச்சேரியின்நகரஅமைப்பிற்கும்,நேரானதெருக்களின்அமைப்பிற்கும்எவ்விதகுந்தகமும்ஏற்படுத்தாதஅளவில்வீடுகளைஅமைத்தனர்.
தமிழர்கள்தங்கள்விருப்பம்போல்வீடுகளைஅமைத்துக்கொண்டனர்.
பிரெஞ்சியர்கள்நகரஅமைப்பைபாதுகாப்பதில்கவனமாகஇருந்தனர்.
ஆனால்அவர்கள்பாதுகாத்தஇந்தநகரஅமைப்புபோர்ச்சுகீசியர்கள்புதுச்சேரிக்குவரைந்துக்கொடுத்தவரைப்படத்தின்அடிப்படையில்அமைந்ததுஎன்பதுவரலாற்றுஉண்மை.

**உதவியநூல்கள்:**

1. ஆரோக்கியநாதன், எஸ். 1990. காரைக்கால், புதுச்சேரிதெருப்பெயர்கள் ஆய்வு, முத்துப்பதிப்பகம், விழுப்புரம். 605602.

2.ஆரோக்கியநாதன், எஸ். 2014. புதுச்சேரிமாவட்டதேவாலயங்கள். நன்மொழிபதிப்பகம், புதுச்சேரி. 605 003.

3.இராசசெல்வம், நா. 2020. பிரஞ்சியர்காலப்புதுச்சேரி. செம்பியன்சேரன்பதிப்பகம், புதுச்சேரி, 605008

4. இராமன், எம்.பி. 2021 (அ). ஃபிரஞ்சியர்காலப்புதுச்சேரி: மண்ணும்மக்களும் (1674 – 1815). காலச்சுவடுபதிப்பகம், நாகர்கோவில். 629 001.

5. 2021 (ஆ). ஃபிரஞ்சியர்ஆட்சியில்புதுச்சேரி: நாடும்பண்பாடும். (1815 -1945) ,காலச்சுவடுபதிப்பகம், நாகர்கோவில்.629001

6. மன்னர்மன்னன், 1958. புதுச்சேரியைப்பாருங்கள். புரட்சிக்கவிஞர்பதிப்பகம், புதுச்சேரி 605 001.

7. Jayaseela Stephen, S. Urbanaism& the Chequered Existence of the Indo French Town of Pondicherry, in ‘Revue Historique de Pondichery’, Vol: 19. Historical Society of Pondicherry, Pondicherry.

8. Jean Delouche , 2004. Origins of the Urban Development of Pondicherry. French Institute. Pondicherry.

9.Jean Delouche, 2005. Le Vieux Pondichery 1623-1824. (French) French Institute. Pondicherry.